# தென்தமிழகக் கிளைமொழி ஆய்வு

## (ஆய்வுச் சுருக்கம்)

1.0 கடவுள் உலகின் ஒவ்வொரு பகுதியிலும் ஒவ்வொருவருக்கும் ஒவ்வோர் மொழியைக் கற்றுத் தந்தார் எனவும் அவரவர் வழியே அவ்வம் மொழிகள் தழைத்தன என்றும் முற்காலத்தில் ஐரோப்பாவில் ஒரு கருத்து நிலவியது. இத்தாலி மொழியைத் தாத்தே என்ற கவிஞருக்கும், ஜெர்மன் மொழியை லூதர் என்பவருக்கும் ஆங்கில மொழியைக் கிறிஸ்த்தியன் பெடர்சன் என்பவருக்கும் வடமொழியைப் பாணினிக்கும் அதற்கிணையாகத் தென் மொழியைக் குடகுமுனிக்கும் கடவுள் தந்தருளினார் என்ற கருத்து நிலவுகிறது.

ஜெஸ்பர்சன் போன்றோர் முற்காலத்தில் மக்கள் காரணமில்லாமல் குழந்தை போல மழலை பேசி பின்னர் பண்பட்ட நிலையில் பண்பட்ட மொழியினைப் பேசத் தொடங்கினர் என்றுக் கூறினார். இந்நிலையில் Bow wow Theory, Ding Dong Theory, Gesture Theory என்னும் பல கருத்தியல் கொள்கைகள் உருவெடுத்தன. மொழி திடீரெனப் பிறந்து விடவில்லை. விதை விதைத்து, முளைத்து, துளிர்விட்டுப் படிப்படியாக மொழி உருக்கொண்டது, வளர்ச்சி பெற்றது, பண்பட்டது, பசி, மகிழ்ச்சி, கோபம், பயம், முதலியவற்றை வெளிப்படுத்தும் நிலைகளில் விலங்குகள் எழுப்பும் ஓசைகள், நுட்பமான வேறுபாட்டைக் கொண்டிருக்கும். அதுபோல மொழி தோன்றாததற்கு முன்பு ஆதி மனிதனும் இப்படி ஒரு சில ஒலிகளை வெளிப்படுத்தினான். அவற்றின் மூலம் தன் கருத்தை குறிப்பால் மற்றவர்களுக்கு உணர்த்தினான். இவ்வாறாக மொழித்தோற்றம் பெற்றிருக்கிறது.

மொழி என்பது குறிகளின் கட்டமைப்பு, ஒவ்வொரு குறியும் ஒலி வடிவு, பொருள் ஆகிய இரு கூறுகளுடன் அமைவது. மொழியே, மனிதனை விலங்கு முதலிய உயிரினங்களிலிருந்து வேறுபடுத்தியது. மக்களின் மன வளர்ச்சிக்கும் நாகரீகத்திற்கும் பண்பாட்டிற்கும் அடித்தளமாக இருந்து வருகின்றது மொழி மக்கள் மேற்கொள்ளும் எல்லாக் கலைகளும் மொழி வழியே பரிமாற்றம் செய்யப்படுகின்றன. காலந்தோறும் வளர்ந்து வரும் கலைகள், அவற்றின் விளைவாக அறிவின் தோற்றங்கள் மொழிவழிதான் பதித்து வைக்கப்பபடுகின்றன, வருங்கால மக்கள் வாழ்வு. வளமாகச் சேர்த்து வைக்கப்பெற்ற கலைக்களஞ்சியமாக மொழி திகழ்கின்றது. மனிதனால் வளர்க்கப்பெற்ற

கலைகளுள் மொழிக்கலையும் ஒன்று. எறும்பு, தேனீ, நாய், குரங்கு, யானை முதலிய பிற உயிரினங்களும் தம்மிடையே கருத்துப்பறிமாற்றம் செய்து கொள்கின்றனவாயினும் அதுவொரு சிறிய அளவிலேயேயாகும். மாறாக, மனிதன் கருத்துப்பரிமாற்றக் கலையில், மொழி அளவிட முடியாத அளவிற்கு வளர்ச்சி கண்டுள்ளது.

மனிதன் மண்ணில் உயிரிணமாகத் தோன்றியதும் கை, கால், அசைத்துச் செயல்படத் தொடங்கி அழுகுரல் எழுபபுகின்றான். இத்தகைய குரலே, காலஞ் செல்லச்செல்ல ஒலியியல் வேறுபட்ட பழக்கத்தால் வேறுபட்ட பொருளோடு தொடர்ந்து ஒலியியல் வேறுபாடும் அவை குறிக்கும் பொருள் வேறுபாடுமாக வளர்ந்து வந்துள்ளது. இது மொழியின் வளர்ச்சியில் முதல்படியாகும். இதனைத் தொடர்ந்து காலமாற்றத்திற் கேற்றாற்போலவும், சூழலுக்கு ஏற்றாற்போலவும் மொழி மாற்றத்திற்குள்ளாகிறது. இதுபோன்ற காரணங்களால்தான் மொழி இன்றளவும் தன்னை நிலைநிறுத்திக் கொண்டுள்ளது. மேலும் மனிதனின் சிந்தனையால் வளர்ச்சி பெற்றுள்ள பண்பாடு, சமுதாயம், தொழில், அறிவியல்சார் கூறுகள் அனைத்தையும் தன்னகத்தே பதிவு செய்து வைத்துக்கொள்வது மட்டுமல்லாது பின்வரும் சந்ததியினர்களுக்கு அவற்றை விளக்கி நிற்கும் ஒரு களஞ்சியமாக, கருவூலப் பெட்டகமாக விளங்குகிறது. ஒரு மொழியானது அதைப்பேசும் மக்களின் தேவைக்கேற்ப, அவர்கள் வாழும் இடம், சுற்றுப்புறச்சூழல், அவர்களது பாரம்பரிய தொழில்சார் அறிவுகள், கலாச்சாரம், பண்பாடு ஆகியவைகளின் கட்டுப்பாட்டு விதிமுறைகள், அவற்றின் விளக்கங்கள், சமுதாயத்தின் நம்பிக்கைகள், வழிபாட்டு முறைகள், உணவுப் பழக்க வழக்கங்கள் என அனைத்தும் சமுதாயக் கூறுகளையும் உள்ளடக்கியுள்ளது.

இந்திய நாட்டில் 1700 க்கு அதிகமான மொழிகள் பேசப்படுகின்றன என்று கூறுகின்றனர் இவற்றுள் பல தனிமொழியாக இருக்கும், பல கிளைமொழியாக இருக்கும் சில நன்கு அறியப்படுவதற்குறிய நிலையில் அறுதியிடமுடியாத தன்மையில் இருக்கும். இவற்றை ஆராய்ந்து திட்டவட்டமாக அறிதியிடுவது மொழியியல் அறிஞர்களின் கடமை. இம்முயற்சியில் ஓரளவு வெற்றி பெற்று வருகின்றனர் மொழியியல் ஆராய்ச்சியாளர்கள். இந்திய நாட்டில் பேசப்படும் மொழிகளனைத்தும் பின்வரும் மொழிக்குடும்பங்களாகத் தொகுக்கப்பட்டுள்ளன அவை:

1. இந்தோ – ஆரிய மொழிக்குடும்பம்
2. திபேத்திய – பர்மிய மொழிகள்

3. ஆஸ்டிரிக் மொழிகள்

4. திராவிட மொழிக்குடும்பம்

என்பனவாகும். இவற்றுள் திராவிட மொழிகளும் அடங்கும் ஆகும். திராவிட மொழிகள் பின்வரும் மூன்று வகைகளாகப் பகுக்கப்படுகின்றன.

1. தென் திராவிட மொழிகள்
2. நடு திராவிட மொழிகள்
3. வட திராவிட மொழிகள்

**1.1 தென் திராவிட மொழிகள்**

தமிழ், மலையாளம், கன்னடம், குடகு, துளு, தோடா, கோத்தா, கொரகா போன்ற மொழிகள் தென் திராவிட மொழிகளாகும்.

**1.3 நடு திராவிட மொழிகள்**

தெலுங்கு, கோண்டி, கோயா, கூயி, கூவி, கொலாமி, பர்ஜி, கதபா, கொண்டா, நாயக்கி, பெங்கோ, மண்டா போன்ற மொழிகள் நடு திராவிட மொழிகளாகும்

**1.4 வட திராவிட மொழிகள்**

குருக், மால்டோ, பிராகுயி போன்ற மொழிகள் வட திராவிட மொழிகளாகும்.

திராவிடம் என்னும் சொல் திராவிட நாடு என்ற பொருளைத் தருகின்றது. திராவிடம் என்ற சொல் பொதுவாக பெயரடையாகவே வழங்கப்படுகிறது. திராவிட நாடு, திராவிட மொழிகள், திராவிட இனம், திராவி நாகரீகம், போன்ற சொற்றொடர்களில் இச்சொல் பெயரடையாக நிற்கிறது. ஆங்கிலத்தில் ‘Dravidian’ எனப்படும் அடையின் மொழிபெயர்ப்பாகவே தமிழில் இச்சொல் வழங்கப்படுகிறது. இச்சொல்லை, இவ்வாறு பயன்படுத்துமாறு செய்த பெருமை டாக்டர் கால்டுவெல்லையே சாரும்

தமிழ், மலையாளம், கன்னடம், குடகு, துளு, தெலுங்கு, போன்ற மொழிகள் அனைத்தையும் குறிக்கும் சொல்லாக இதனைப் பபயன்படுத்துவர். 1856 ல் வெளிவந்த கால்டுவெல்லின் ‘திராவிட அல்லது தென்னிந்திய குடும்ப மொழிகளின் ஒப்பிலக்கணம்’ (A Comparative Grammar of the Dravidian or South Indian Language) எனனும் நூலகும் கால்டுவெல்லின் கருத்தாழமிக்க ஒப்பிலக்கண நூல்

செம்மையானது. இன்னும் வழக்கில் உள்ளது. ஒப்பிலக்கணத்துறையில் ஆழங்கால் பதித்தது.

திராவிடம் என்னும் சொல் தன்னால் ஆக்கப்பட்ட சொல் இல்லை என்றும் இப்பொருண்மையில் பல வடமொழி ஆரியர்கள் இதனைப் பயன்படுத்தியுள்ளனர் என்றும் கூறுவர் மனுவில் (X43,44). ஜாதி பிரஷ்டம் செய்யப்பட்ட சத்திரியர்களை பற்றிப் பேசும்போது 'திராவிட' என்ற சொல் பயன்படுத்தப் பட்டிருபதாகவும் தென்நாட்டு மக்களைக் குறிக்கும் சொல்லாகவே இது பயன்படுத்தப்பட்டிருக்கிறது என்றும் மகாபாரதத்தில் திராவிடம் என்ற பொருளிலேயே வந்திருப்பதாவும் எனவே வடமொழியாளர்கள் தென்னிந்திய மக்களைப் பொதுவாக இப்பெயரில் அழைத்து வந்தனர் எனக் கருத இடம் இருப்பதாகவும் கூறுகிறார் கால்டுவெல்(1996:23).

7ம் நூற்றாண்டில் வாழ்ந்த குமரில பட்டர் என்பவர் 'ஆந்திர திராவிட பாஷா' (Andra Dravida Bhasha) எனக் குறிப்பிட்டிருப்பதாகவும் காட்டுவார். கி.பி 1854-ல் இராஜேந்திர மித்திலால் என்பவரும் இச்சொல்லை இப்பொருளில் வழங்கக்காணலாம். எனவே 'திராவிட' என்ற சொல் மிகப் பழங்காலந்தொட்டே தென்னாட்டு மக்களைக் குறிக்கும் ஒரு பொதுச்சொல்லாக பயன்பட்டு வந்துள்ளது. எனவே பொதுப்பண்புகள் நிறைந்து ஒரே இனமாக நிற்கும் இம்மொழிகளை இப்பெயரால் அழைப்பது பொருந்தும் என்றும், இதனால் 'Tamilan' 'Tamulic' போன்றவை தமிழை ஒட்டிய அடைபொழியாகவே இருக்கிறது என்று கூறுகிறார்.

'திராவிட' என்ற வடமொழிச் சொல்லிலிருந்துதான் தமிழ் என்ற சொல் உருவாயிற்று என்பார் கால்டுவெல். திராவிடம் என்பது வடமொழிச் சொல். தமிழில் இதற்கு எந்தவித வோச்சொல் பொருளும் கொடுக்கமுடியாது என்றும் மிகப் பழமையான இலக்கியங்களில் 'திரமிடா' (Dramida) என்ற சொல் காணப்படுகிறது என்றும், அச்சொல்லில் மகரம் 'தமிழ்' என்ற சொல்லின் மகரத்துடன் ஒத்துள்ளது என்றும் பின்னர் மகரம் லகரமாகத் திரிந்தது என்றும், பழைய மலையாள இலக்கியங்களில் 'திரமிலா' (Dramila) என்ற சொல் அடிக்கடி வருகிறது என்றும் பாளி மொழியிலும் 'தாமிலோ' (Damilo) என்ற சொல் காணப்படுகிறது என்றும் கூறி, இவையனைத்தும் தமிழ் ஒலியமைப்புக்கு ஏற்றவாறே உள்ளன என்றும் அதனால் 'திராவிட' என்ற சொல்தான் 'தமிழ்' என்ற சொல்லின் தோற்றத்திற்குக் காரணம் என்றும் கூறுகிறார். 'திராவிட' என்னும் சொல் எவ்வாறு மாறி 'தமிழ்' என மாற்றம் பெற்றுள்ளதைக் காணமுடிகிறது.

திராவிட > திரமிட

திரமிட > திரமில

திரமில > திரமிலே

திரமிலோ > தமிழ்

‘திரவிட’, ‘திராவிட’, ‘திரமிட’ என்னும் மூன்று சொற்களுள் ‘திரவிட’ திரமிட என்பவை மிகவும் பழமையானவை என்றும் இச்சொல் தமிழர்களை மட்டுமே குறிக்கும் என்று கூறுகின்றனர். திராவிட மொழிகளுக்கிடையே வளர்ச்சியடைந்த மொழி, வளர்ச்சியடையாத மொழி என இரு வகைப்படுத்தப்படுகின்றன.

எனவே உலகில் உள்ள எல்லா மொழிகளும் அம்மொழிகளைப்பேசும் மக்களின் தேவைகளை நிறைவேற்றும் தொடர்பு சாதனமாகவே விளங்குகிறது. இருப்பினும் மொழியை வளர்ச்சியடைந்த மொழி, வளர்ச்சியடையாத மொழி என பாகுபடுத்திப் பார்க்கும் போது, ஒரு மொழியானது அதைப் பேசும் பழங்குடி, விவசாயக்குடிகளின் தேவைகளை மட்டும் பூர்த்தி செய்யாது உலகளாவிய பார்வையில் எத்தனை வகையான வகைகளில் தன் செயல்பாடுகளைச் செய்ய முடியுமோ அனைத்தையும் செய்யவல்ல மொழியாக இருப்பவைகள் வளர்ச்சியடைந்த மொழிகள் எனவும் அவ்வாறல்லாத மொழிகள் வளர்ச்சியடையாத மொழிகள் எனவும் கருதப்படுகின்றன என்பது காகனின் (1927:103) கருத்தாகும் மேலும் மனோகரன் (2012) ‘கலைச்சொல்லாக்கம்: வழக்குச்சொற்களும் அகராதிகளும் என்னும் நூலில் மொழியைப் பயன்படுத்தும் முறையில் சமுதாயத்தால் அங்கீகரிக்கப்பட்ட வகையில் சொற்களைத் தேர்ந்தெடுக்க வேண்டும் என்கிறார். மேலும் மொழி என்பது துல்லியமாக வேறுபடுத்திக் காட்டக்கூடிய இலக்கண அமைப்பும் பொருள் உட்பொருள் அமைப்பும் கொண்டு விரிவான விளக்கங்களைக் கொண்ட பொருளையும் எண்ணங்களையும் வேறுபடுத்திக்காட்ட வல்லது. எடுத்துக்காட்டாக முறத்தில் போட்டுச் சுத்தம் செய்வதைப் ‘புடைத்தல்’ என்பர். ஆனால் முறத்தால் சுத்தம் செய்வது அதைப் பயன்படுத்தும் முறையிலும் செய்கை முறையிலும் சிறு, சிறு மாற்றங்கள் கொண்டிருந்தாலும் ஒவ்வொரு செயலுக்கும் ஒவ்வொரு சொல்லாகப் ‘புடைத்தல்’, ‘கொலித்தல்’, ‘நாவுதல்’, ‘சலித்தல்’ என நான்கு வகையான சொற்களின் நான்கு வகையான செய்கை முறைகளையும், மாறுபடும் தன்மை நான்கு வகையான

வினைச்சொற்களால் வேறுபடுத்திக் காட்டிக் தமிழ் பேசும் மக்களால் வகைபடுத்தப்பட்டுள்ளன. இவை தவிர முறத்தின் உதவியோடு களத்தில் தானியங்களைக் காற்றில் வீசிச் சுத்தம் செய்யும் முறையைத் தூத்தல் என்பர். இவ்வாறாக மொழி உலகமயமாதலின் காரணமாகவும் புதிய புதிய பொருட்கள் கண்டுபிடுப்புகளின் மூலமாகவும் மொழி பல பழமையான சொற்களை அழித்தும் ஒரு சில புதிய சொற்களை உருவாக்கியும் வருகின்றது. எனவே மொழி ஆராய்ச்சி மனித இனத்தின் ஆராய்ச்சியாகும். மொழியை ஆராய முதலில் கிளைமொழி ஆய்வு முக்கியமானதாகும். மொழி வரலாறு என்பது மொழியில் காலந்தோறும் ஏற்படும் மாற்றங்களாகும். மொழிஆய்வு பண்டைக் காலந்தொட்டே நடந்து வந்தாலும் பத்தொன்பதாம் நூற்றாண்டின் பிற்பகுதியில்தான் அறிவியல் அடிப்படையில் அனுகுகின்ற முறை தொடங்கப்பட்டது அறிவியல் துறையில் ஏற்பட்ட விரைவான மாற்றங்களையும் முன்னேற்றத்தையும் போல மொழியியல் துறையிலும் மாற்றங்கள் ஏற்பட்டது. உயிரிணங்கள் தோற்றம், வளர்ச்சி பற்றி டார்வின் பரிணாமக் கொள்கை இயற்கை மொழியின் தோற்றம், வளர்ச்சி பற்றி ஆராய வழிவகுத்தது. மொழி வளர்ந்து பரிணாம வளர்ச்சியாலும் கடன் வாங்கலாலும் வறலாற்று மொழியியல் அறிஞர்கள் கூறுகின்றனர். மொழி காலந்தேர்றும் மாறிக்கொண்டே இருக்கின்றது என ஒரு மொழி பல்வேறு காலங்களில் அடைந்த மாற்றத்தைக் காலமுறைப்படி ஆராய வரலாற்று அறிவியல் அடிப்படையில் அமைந்த ஆராய்ச்சியினை சான்றுகள் கொண்டு ஆராய வேண்டும். தமிழ் மொழியின் வரலாற்றை அறிய இலக்கியங்கள், இலக்கணங்கள், அகராதிகள், கல்வெட்டுகள், அயல்நாட்டார் குறிப்புகள், கிளைமொழிகள் போன்றவற்றை அடிப்படைச் சான்றுகளாகக் கொள்ளலாம். இவற்றின் இறுதியாக வரும் கிளைமொழியினை அமைந்துள்ளது.

ஒரு மொழியை முழுமையாக அறியவேண்டுமாயின் அம்மொழியிலுள்ள இலக்கிய இலக்கணங்களை மட்டும் அனுகினால் போதாது. மக்கள் பேசும் பேச்சு மொழியையும் ஆராயவேண்டும். பேச்சுமொழியின் சிறப்பியல்புகளையும் புதிய பொருள்கள், இலக்கண அமைப்பு முதலியவற்றையும் வகைப்படுத்தினால் மொழியை முழுமையாக ஆராய முடியும்.

கிளைமொழி ஆய்வின் மூலம் பேச்சுவழக்கின் சிறப்பியல்புகளையும் பழைய வழக்குகளையும் அறியலாம். திருநெல்வேலி மாவட்ட கிளைமொழியில் ‘நீம்’’ என்னும் முன்னிலை பன்மை வடிவம் காணப்படுகின்றது. நிகழ்கால விகுதியாக ‘த’ என்பது ‘சொல்லுதான்’ என்னும் சொல்லில் காணப்படுகின்றது. ‘உத்தரம்’ என்ற

சொல்லுக்கு ‘உத்தரம்’ ‘கைமரம்’ ‘விடை’ ‘பங்குனித்திருவிழா’ என்று பல பொருள் தருகின்ற கிளைமொழி வழக்கின் மேற்கண்ட சொற்கள் வெவ்வேறு சொற்களாக மாற்றம் பெற்று விட்டன. எனவே கிளைமொழியை நன்கு ஆய்வு செய்தால் பல்லாயிரக்கணக்கான சொற்கள் தமிழ் பேரகராதியில் இடம் பெறுவதோடு தமிழ் மொழியும் வளம்பெறும். கிளைமொழி என்பது ஒரு இனத்தின் அடையாளமாகத் திகழ்கிறது.

தமிழ்மொழி இருநிலை வழக்குடைய மொழியாகும். இருநிலை வழக்கு என்பது பேச்சு வழக்கு, எழுத்து வழக்கு என்பனவாகும். மொழியை எழுதப்படிக்கத் தெரிந்தவர்கள் அனைவரும் ஒன்று போல எழுதுவதுண்டு. ஆனால் பேச்சு மொழியை அனைவரும் ஒன்று போல பேசுவதில்லை. பேச்சு வழக்கு இடத்திற்கு இடம், மனிதனுக்கு மனிதன் வேறுபடுவதைக் காணலாம். இவ்வேறுபாடுகள் சூழல், தொலைவு, ஆறு, கடல், மலை போன்ற இயற்கைக் காரணங்களாலும், தொழில், சாதி, கல்வி, வயது, பாலினம் போன்ற சமூகக் காரணங்களாலும் ஏற்படுகின்றன.

### 1.5 பேச்சுவழக்கு

பொருள்களுக்கு உரிய ஒலிவடிவான குறியீடுகள் கொண்டது பேச்சு மொழியாகும். ஒருவர் தான் கூற விழையும் கருத்துகளை அழுத்தந்திருத்தமாக பிறர் பொருள் உணர்ந்து கொள்ளும் வண்ணம், இலக்கண மரபுகளைப் பின்பற்றியும், பின்பற்றாமலும், ஏற்ற வேகத்துடனும், உணர்ச்சியுடனும், கருத்து, ஒலிப்பு, சொற்றொடர் ஆகியவற்றில் தெளிவுடனும் எடுத்துரைப்பதே சரியான பேச்சு வழக்காகும்.

### 1.6 எழுத்து வழக்கு

வரிவடிவமான குறியீடுகள் கொண்டது எழுத்து மொழியாகும். ஒரு மொழியிலுள்ள ஒலி வடிவங்களைக் கண்களால் காணும் வகையில் இலக்கண முறைமைக்கு உட்பட்டும் உட்படாமலும் வரிவடிவங்களாக வெளியிடுவதே எழுத்து வழக்காகும்.

### 1.7 கிளைமொழி

கிளைமொழி என்பது ஒரு மொழியிலிருந்து பிரிந்து அல்லது கிளைத்த மொழி என்பது அல்ல. மூலத்திராவிட மொழியிலிருந்து பிரிந்த மொழிகள் அனைத்தையும் வெவ்வேறு மொழியாக ஓரே குடும்பத்தைச் சார்ந்தது என்கின்றனர். இங்கு கிளைமொழி என்னும் சொல் தனிச் சிறப்புச் சொல்லாக ஒரு

கலைச் சொல்லாக பயன்படுத்தப்பட்டுள்ளது. இதனை நேரடியாக விளக்காமல் சுற்றி வளைத்துத்தான் பொருள் கூற முடிகிறது. கிளைமொழிகள் சொற்களிலும் ஒலி முறையிலும் வேறுடுகின்றன. கிளைமொழி இன்ன இடத்தில் வாழ்பவர், அல்லது இன்ன இனத்தைச் சார்ந்தவர் அல்லது இன்ன தொழில் செய்கின்றவர் என இனங்கண்டு கொள்ளப் பயன்படுகிறது எனலாம். ஒரு மனிதன் ஒரு குறிப்பிட்ட நேரத்தில் பேசும் பேச்சினை அவனுடைய தனிநடை எனலாம். அவர் ஒரு குறிப்பிட்ட பருவத்தில் பேசுகின்ற பேச்சினை அவருடைய தனி மனித பேச்சு வழக்கு எனலாம். அவரைப் போன்று பேசுகின்ற பல தனி மனிதர்களின் ஒருங்கமைந்த பேச்சினைக் கிளைமொழி எனலாம். இப்படி பல கிளைமொழிகள் ஒன்றுசேருமாயின் அதனை மொழி என்கிறோம். எனவே கிளைமொழி மொழியினுள் அடங்கும் ஒரு பிரிவு. மொழியின் தன்மைகளைப் பெற்று ஒரு குறிப்பிட்ட மக்கள் தொகையினரால் பேசப்படுவதாகும். கிளைமொழியின்றி மொழி தனித்துச் செயல்படலாம். ஆனால் மொழியின்றிக் கிளைமொழி தனித்து இயங்காது. என்கிறார் கோ.சீனிவாசவர்மா(1976).

### 1.8 மதுரைப் பெயர்க்காரணம்

மதுரை 147.99 கி.மீ பரப்பளவு கொண்டது. 2011-ஆம் ஆண்டு இந்திய மக்கள் தொகை கணக்கின்படி 10,017,865 பேர் வசிக்கின்றனர். மதுரையின் எல்லையாக சீறா நாகம் - நாகமலை, கறவா பசு – பசுமலை, பிளிறா யானை – யானைமலை, முட்டாக்காளை – திருப்பாலை, ஓடாமான் - சிலைமான், வாடாமலை – அழகர்மலை, காயா பாறை- வாடிப்பட்டி, பாடா குயில் - குயில் குடி ஆகிய ஊர்கள் அமைந்துள்ளன.

இந்நகரம் கூடல், மல்லிகை மாநகர், நான்மாடக்கூடல், திரு ஆலவாய் போன்ற பல்வேறு பெயர்களால் குறிக்கப்படுகிறது. மருத மரங்கள் அதிகமாக இருந்ததால் மதுரை என்றும், 7 ம் நூற்றான்டைச் சேர்ந்த பரஞ்சோதி முனிவரால் இயற்றப்பட்ட திருவிளையாடற் புராணத்தில் மதுரையின் பல்வேறு பெயர்கள் பட்டியலிடப்படுகின்றன, மூன்று சங்கங்கள் கூடியதால் கூடல் என்றும், நான்கு கோபுரங்களால் சூழ்ந்ததால் நான்மாடக்கூடல் என்றும், தமிழ் கல்வெட்டியலாளர் ஐராவதம் மகாதேவன் அவர்களின் குறிப்பின்படி, கி.மு இரண்டாம் நூற்றான்டைச்சார்ந்த தமிழ் பிராமி கல்வெட்டு ஒன்று ‘மதிரை’ எனக் குறிக்கிறது. இந்நகரம் மதிலால் சூழப்பட்ட நகரம் என்று குறிப்பிடுகின்றார்

## 1.9 மதுரையின் சிறப்பு

உலகின் பழமையான ஊர், முருகனின் ஆறுபடை வீடுகளில் இரண்டு படை வீடுகள் இங்குதான் உள்ளன. இந்த ஊரில் வாழும் உழைக்கும் மக்கள் மேலாடை இன்றி இருப்பதைக் கண்ட காந்தியடிகள், தானும் மேலாடை அணிவதை விட்டுவிட்டு அரை ஆடை மனிதராக மாறிய பெருமைக்குரிய ஊராகும்.

உலக அதிசய போட்டியில் இடம் பெற்ற இந்த ஊரின் கோவிலின் ஆகாய விமானத்தில் இருந்து பார்த்தால், இந்த ஊர் தெருக்கல் தாமரை வடிவத்தில் இருக்கும். இவ்வூருக்கு கடம்பவனம், கூடல் நகர், தூங்கா நகரம் என பல பெயர்களும் உண்டு. தமிழ் மொழிக்கு சங்கம் வைத்து தமிழ் வளர்த்த நகரம்.

## 1.10 திருநெல்வேலி பெயர்க்காரணம்

திக்கெல்லாம் புகழுறும் திருநெல்வேலி என சம்மந்தரும் தண்பொருநைப் புனல் நாடு எனச் சேக்கிழாரும் பொன்திணித்த புனல் பெருகும் பொருநைத் திருநதி என்று கம்பரும் பாடிய ஊர் திருநெல்வேலியாகும்.

2011 ஆம் ஆண்டு இந்திய மக்கள் தொகை கணக்கின்படி இவ்வூரின் மக்கள் தொகை 33,22,644 பேர் ஆகும்.

16 ஆம் நூற்றாண்டு நூல் வேணுவனப்புராணம் திருநெல்வேலியை வேணுவனம் என்றும் ‘வேணு’ என்னும் சொல் மூங்கிலைக் குறிக்கும என்றும் குறிப்பிட்டுள்ளது. பண்டைய காலத்தில் மூங்கில் காடாக விளங்கி மூங்கில் நெல்லால் பசியை போக்கிய காரணத்தினால் இந்த ஊரை நெல்வேலி எனப் பெயரிட்டு அழைத்தார்கள்.

முன்னொரு காலத்தில் தீவிர சிவ பக்தரான வேதபட்டர் என்பவர் மிகவும் வறுமையில் வாழ்ந்து வந்தார். தமது வாழ்க்கை நிலையை மாற்ற வேண்டும் என்பதனால் ஒவ்வொரு ஊரிலும் அமைந்த சிவனை வழிபட்டு வந்தார். சிவன் அருளால் வேதபட்டருக்கு சகல செல்வங்களும் கிடைத்தன. வேணுவனம் வந்த வேதபட்டர் சிவனுக்கு நித்ய பூஜைகள் செய்து ஏழைகளுக்கு அன்னதானம் வழங்கி வந்தார். வேதபட்டரை சோதிக்க நினைத்த சிவபெருமான் அவருக்கு வழங்கிய செல்வங்கள் சிறிது சிறிதாக குறையும்படி செய்தார். இதனால் சிவனடியார்களுக்கு உணவு வழங்குவதிலும் சிவ பூஜை செய்வதிலும் வேதபட்டருக்கு சிரமம் ஏற்பட்டது. இருப்பினும் இறைவனுக்கு நித்ய பூஜைகள் தடைபடக்கூடாது என்பதற்காக அவர் பொதுமக்களிடம் யாசகம் பெற்று நித்ய பூஜை நடத்தி வந்தார். ஒரு நாள் நெய்வேத்தியத்திற்காக நெல்லை

காயவைத்துவிட்டு குளிப்பதற்காக தாமிரபரணி ஆற்றுக்கு சென்றுவிட்டார். அப்போது மழை குறுக்கிட்டது. நெல் நனைந்து விடுமோ என்று பதறியபடி கவலையுடன் அவர் கோவிலுக்கு ஓடி வந்தார். ஆனால் அங்கு இறைவனின் திருவிளையாடலால் காயப்போடப்பட்டிருந்த நெல் மட்டும் நனையாமல் வேலிபோடப்பட்டு பாதுகாக்கப்பட்டு இருந்தது. இதைப்பார்த்து வியந்த வேதபட்டர் நடந்த சம்பவத்தை பாண்டிய மன்னனிடம் தெரிவித்தார்.

நெல்லுக்கு இறைவன் வேலியிட்டுக் காத்ததால் 'வேணுவனம்' நெல்வேலி எனப்பெயர் பெற்றது. பின்னாலில் 'திரு' என்று சிறப்புச் சேர்த்து திருநெல்வேலி எனப்பெயர் பெற்றது.

### 1.11 ஆய்வுத் தலைப்பு

காலமாற்றம், இடமாற்றம், நவீன கல்விமுறையின் தாக்கம், மொழிக்கலப்பு போன்ற காரணங்களால் மக்களின் பேச்சு வழக்கில் மாற்றம் ஏற்பட வாய்ப்புகள் உள்ளன. இதனால் காலப்போக்கில் அம்மக்களின் மொழி வழக்கொழிந்து போவதற்கு அதிக வாய்ப்புள்ள காரணத்தினால் தென்தமிழக மக்களின் பேச்சு வழக்கினை அறியும் பொருட்டாக 'தென் தமிழகக் கிளைமொழி' ஆய்வு எனும் தலைப்பு ஆய்வுப்பொருளாக தெரிவு செய்யப்பட்டுள்ளது.

### 1.12 ஆய்வுப் பொருள்

தமிழகத்தின் தென்பகுதிகளான மதுரை, திருநெல்வேலி ஆகிய பகுதிகளில் பேசப்படும் பேச்சு வழக்கினை அடிப்படையாகக் கொண்டு ஆய்வதே ஈண்டு ஆய்வுப் பொருளாக தெரிவு செய்யப்பட்டுள்ளது.

### 1.13 ஆய்வு நோக்கம்

மனிதர்கள் சூழல் அடிப்படையில் மொழியின் பரிமாணத்தை காலந்தோறும் அடையாளபப்படுத்தி வருகின்றனர். மொழி இப்பரிமாணமாற்றத்தால் மனிதர்கள் வாழும் இடம், சூழல், காலம், பால், வயது போன்ற காரணங்களால் தனது வளர்ச்சியை தொடங்கியும், பல மாற்றங்களைக் நிகழ்த்திக் கொண்டும் வருகின்றது. அம்மொழி பேசும் தென் தமிழகமான மதுரை, திருநெல்வேலி மக்களின் பேச்சு வழக்கினை ஆராந்து, இரண்டு மாவட்ட மக்களின் பேச்சு வழக்கினை ஒப்பிட்டு அவற்றின் மூலம் கிடைக்கும் ஒற்றுமை வேற்றுமைகளைக் கண்டறிந்து அவற்றை நிலைபேராக்கம் செய்வதும், மொழியியல் கூறுகளான ஒலியனியல் மாற்றம், உருபனியல் மாற்றம், சொற்பொருள் மாற்றம்

ஆகியவற்றை விளக்குவதும், சங்ககால சொற்களுடன் இக்காலச் சொற்களை தொடர்புபடுத்திப் பார்ப்பதும் இரு மாவட்டங்களின் தற்போதைய கிளைமொழியை ஆய்வு செய்வதும் இவ்வாய்வின் நோக்கமாகும்

### 1.14 ஆய்வுப் பயன்

தமிழர்களின் பண்பாடு, மரபு, எவ்வாறு பாதுகாக்கப்படுகின்றதோ அவ்வாறே தமிழ்மொழியின் கிளைமொழிகளைப் பாதுகாப்பது அவசியமாகும். கிளைமொழிகள் என்பது நம் மொழியின் பன்பாட்டுக் களஞ்சியமாகும். எனவே வழக்குச் சொற்களை நிலைபேராக்கம் செய்து ஆவணப்படுத்தி பாதுகாப்பதே இவ்வாய்வேட்டின் பயனாகும்.

### 1.15 ஆய்வு எல்லை

தென் தமிழகப்பகுதிகள் நீண்ட நெடிய பகுதியாக இருப்பதால், இப்பகுதி முழுவதும் இவ்வாய்வேட்டிற்கு உட்படுத்திட முடியாத காரணத்தினால் மதுரை, மற்றும் திருநெல்வேலி மாவட்டத் தமிழ்கிளைமொழி பேசும் பகுதிகள் மட்டும் இந்த ஆய்வுக்கு எல்லையாக ஆய்வாளரால் எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளன. மேலும் இவ்விரு மாவட்ட தமிழக் கிளைமொழியில் ஏற்படும் ஒலியன், உருபனியல், பொருண்மை, மாற்றம் மட்டுமே எல்லையாகக் கொண்டு ஆய்வு செய்யப்பட்டுள்ளது.

### 1.16 ஆய்வு முறை

இவ்வாய்வின் எல்லையான மதுரை, திருநெல்வேலி மக்களிடம் சென்று நேரடி கள ஆய்வின் மூலமாக தகவல்கள் திரட்டியும், பொது இடங்களில் மக்கள் பேசும் நிலையில் உற்று நோக்குதல் மூலமாகவும் தகவல்களை திரட்டியும் ஆய்வு மேறகொள்ளப்பட்டுள்ளது. இவ்வாய்வின் வழி தகவல் அளிப்பவரிடம் சொற்களை விளக்கிச் கூறும்போது விளக்கமுறை ஆய்வாகவும், இரண்டு மாவட்ட மக்கள் பயன்படுத்தும் கிளைமொழிச் சொற்களை ஒப்பீட்டு பார்க்கையில் ஒப்பீட்டாய்வாகவும், தகவலாளிகளின் ஒலிப்புமுறை, கிளைமொழிச் சொற்களைப் பகுத்துப் பார்ப்பதால் பகுப்பாய்வு முறையாக ஆய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

### 1.17 கருதுகோள்

பொருளாதாரம், சூழல், அறிவியல் தொழில் நுட்ப வளர்ச்சி நவீனமயமாதல், உலகமயமாக்கம் போன்ற காரணங்களால் கிளைமொழியில் மாற்றம் ஏற்படுகின்றது. தற்கால வயதான மக்களின் பேச்சு வழக்கில் பழைய சொற்கள் நிறைந்திருப்பதைக் காணமுடிகிறது. நவீன கல்விமுறையில் கிளைமொழிகள் பல்வேறு தாக்கத்திற்கு உள்ளாகியுள்ளன. எனவேதான்

கிளைமொழி ஒரு மொழியின் பண்பாடின் கருவூலமாகவும், மக்களின் அடையாளமாகவும் திகழ்கிறது, நவீனக் கல்விமுறையால் பேச்சு வழக்குகள் தாக்கத்திற்கு உட்பட்டுள்ளன. வயதான முதியவர்கள் பழமையான சொற்களைப் பாதுகாக்கும் கருவூலமாகத் திகழ்கிறார்கள். அவ்வாரான கிளைமொழிச் சொற்களை நிலைபேராக்கம் செய்து ஆவணப்படுத்துவதும் இவ்வாய்வின் கருதுகோளாக அமைகின்ளறன.

### 1.18 ஆய்வுத் தரவுகள்

களஆய்வின் மூலம் திரட்டப்படும் தகவல்கள், பயன்பாட்டுச் சொற்கள் ஆய்வுத்தரவுகளாக பபயன்படுத்தப்பட்டுள்ளன. இவை இரண்டு வகையாக பிரிக்கப்பட்டுள்ளன.

1) முதன்மைத்தரவுகள்

   நேரடிக்கள ஆய்வின் மூலம் திரட்டப்படும் தகவல்கள் முதன்மைத் தரவுகளாகும்.

2) துணைத்தரவுகள்

   ஆய்வுக்கு துணைபுரியும் ஆய்வு தெடர்பான ஆய்வு நூல்கள், ஆய்வுக் கட்டுரைகள், ஆய்வேடுகள், தொலைக்காட்சி, நாவல்கள், செய்தித்தாள்கள் போன்றவை துணைத்தரவுகளாகும்.

### 1.19 ஆய்வேட்டின் அமைப்பு

இவ்வாய்வு முன்னுரை முடிவுரை உள்ளடக்கி ஆறு இயல்களாகப் பகுக்கப்பட்டுள்து.

1. முன்னுரை
2. கிளைமொழியின் விளக்கம்
3. ஒலியனியல் மாற்றம்
4. உருபனியல் மாற்றம்
5. பொருண்மையியல் மாற்றம்
6. முடிவுரை

துணைநூற்பட்டியல்

**‘முன்னுரை’** என்னும் இயல் ஆய்வுப் பொருள், ஆய்வு நோக்கம், ஆய்வுத் தரவுகள், ஆய்வேட்டின் அமைப்பு, துணைநூற்பட்டியல் ஆகியன பற்றிய செய்திகளை உள்ளடக்கியுள்ளது.

**‘கிளைமொழியின் விளக்கம்’** என்னும் இரண்டாம் இயலில் கிளைமொழி பற்றிய செய்திகள், வட்டாரம் என்பதன் விளக்கம், கிளைமொழி ஆய்வின் பயன், சங்க இலக்கியத்தில் கிளைமொழி குறித்த பதிவுகள், தொல்காப்பியம் மற்றும் நன்னூல் போன்றவற்றில் காணப்படும் கிளைமொழி குறித்த விளக்கம் ஆகியவற்றை ஆய்வாளரால் விரிவாக விளக்கப்பட்டுள்ளது.

**‘ஒலியனியல் மாற்றம்’** என்னும் மூன்றாம் இயலில் ஒலியியல் பொருள் விளக்கம், தமிழ் ஒலியன்கள், உயிரொலிகளின் பிறப்பு, ஈருயிர்கள், மெய்யொலிகளின் பிறப்பு, பொது ஒலித்திரிபுகள், போன்றவை கருத்துகள் விளக்கப்பட்டுள்ளன. மேலும் மதுரை, திருநெல்வேலி மாவட்ட மக்கள் பயன்படுத்தும் தமிழ்க் கிளைமொழிச் சொற்களில் பயின்றுவரும் ஒலியனியல் மாற்றங்கள் விரிவாகத் தொகுக்கப்பட்டுள்ளன.

**‘உருபனியல் மாற்றம்’** என்னும் நான்காம் இயலில் பெயர்வகைகள், உருபன் வகைகள், கூட்டுச்சொற்கள், புதுச்சொற்களை உருவாக்குதல், சொல்வகைப்பாடு, பெயர், வினை, பால், வேற்றுமைகள், மதுரை, திருநெல்வேலி மாவட்டத் தமிழ்க்கிளைமொழயில் காணப்பெறும் உருபனியல் மாற்றங்கள் ஆராயப்பட்டுள்ளது.

**‘பொருண்மையியல் மாற்றம்’** என்னும் ஐந்தாம் இயலில் மதுரை திருநெல்வேலி மாவட்ட மக்கள் பயன்படுத்தும் கிளைமொழிச்சொற்களின் வருகை அவற்றின் மாற்றம் போன்றவை விளக்கப்பட்டுள்ளது.

**‘முடிவுரை’** என்னும் இயலில் மதுரை, திருநெல்வேலி மாவட்ட மக்கள் பயன்படுத்தும் தமிழக் கிளைமொழிச் சொற்களின் வட்டார ஒலியனியல், வட்டார உருபனியல், வட்டார பொருண்மையியல் மாற்றம் என்னும் பிரிவின்கீழ் கண்டறியப்பட்ட முடிவுகள் தொகுக்கப்பட்டு பகுப்பாய்வு செய்யப்பட்டு முடிவுகள் கொடுக்கப்பட்டுள்ளன.

**துணைநூற்பட்டியல்** என்னும் பகுதியில் இவ்வாய்விற்கு இரண்டாம் தரவுகளாக அமைந்த நூல்கள், கட்டுரைகள், ஆய்வேடுகள், அகராதிகள், கலைக்களஞ்சியங்கள் ஆகியன தொகுத்து வழங்கப்பட்டுள்ளன.